**<u>District Munsif-cum-Judicial Magistrate Court, Kadaladi</u>.**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF

| | | |
|---|---|---|
| Calender | : | |
| Miscellaneous | : | CC Case No.59/2021 |
| Preliminary Register | : | |
| Sessions | : | **P.W.7** |
| Deposition of witness for | | Prosecution<br>Defence<br>Court |
| Name | : டாக்டர். திரு. டேவிட் மலையரசன் | |
| Husband/Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

எதிரிகள் A1,A4 ஆஜர். A2,A3,A5 ஆஜர் இல்லை. குவிமுச U/s 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of _ 13.04.2023.

<u>முதல் விசாரணை</u>:-

நான் கடலாடி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணி புரிந்து வருகிறேன். நான் கடந்த 14.01.2021ம் தேதி காலை 09.55 மணியளவில் மருத்துவமனையில் பணியில் இருந்தபோது பூலாங்குளம் கிராமத்தை சேர்ந்த புஷ்பராஜ் மகன் சாந்தகுமார் என்பவரை அவரது சகோதரர் அற்புதராஜ் என்பவர் சிகிச்சைக்காக என்னிடம் அழைத்து வந்தார். நான் அவரை விசாரித்தபோது அன்றைய தினம் காலை 9 மணியளவில் தனது வீட்டின் அருகில் வைத்து 6 ஆண்கள் மற்றும் 1 பெண் ஒருவர் கம்பி மற்றும் கட்டையால் தாக்கியதாக கூறினார். நான் அவரை பரிசோதித்தபோது தலையின் பின்புறம் ஒரு வீக்க காயம் காணப்பட்டது. இடது முன் கையில் ஒரு வீக்க காயம் காணப்பட்டது. நான் அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனைக்கு பரிந்துரை செய்து அனுப்பி வைத்தேன். மேற்படி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று அதற்குரிய மருத்துவ சான்றுகள் கிடைக்கப்பெற்றதன் பேரில் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று சான்று வழங்கினேன். அந்த காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடு அ.சா.ஆ.4 ஆகும்.

என்னை போலீசார் விசாரித்தார்கள். காயம்பட்ட நபர் சொன்னதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன ஆயுதத்தால் தாக்கினால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

என்னை போலீசார் சம்பவம் நடந்த அன்றே விசாரணை செய்தார்கள். நான் நீதிமன்றத்தில் எனது முதல் விசாரணையில் கூறியவாறு தான் போலீசார் விசாரணையிலும் கூறியுள்ளேன். நான் காயம்பட்டவருக்கு சிகிச்சை அளித்த பிறகு தான் மருத்துவமனையிலிருந்து காவல் துறைக்கு சம்பவம் குறித்து தகவல் அனுப்பப்பட்டது. காயம்பட்ட நபருக்கு என்ன காயங்கள் ஏற்பட்டிருந்தது என்பது குறித்து போலீசார் விசாரணையில் நான் போலீசாரிடம் தெரிவித்தேன். என்னிடம் காயம்பட்ட நபர் சம்பவம் குறித்து கூறிய விபரங்களை நான் போலீசாரிடம் கூறியுள்ளேன். காயம்பட்ட நபருக்கு எந்த ஆயுதத்தால் தாக்கினார்கள், எங்கு காயம்பட்டுள்ளது என்பது குறித்து நான் போலீசாரிடம் காயம்பட்ட நபர் கூறிய விபரத்தினை நான் கூறியுள்ளேன். காயம்பட்ட நபரை எத்தனை நபர்கள் தாக்கினார்கள் என்பது குறித்தும், எங்கெங்கு காயம் ஏற்பட்டிருந்தது என்பது குறித்தும் நீங்கள் வாக்குமூலம் அளித்ததாக போலீசாரால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்தில் கண்டுள்ளதா என்றால் அதில் வீக்க காயம் என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் கூறிய விபரங்கள் அதில் தெளிவாக காணப்படவில்லை. காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயங்களானது இருசக்கர வாகனத்தில் செல்லும் போது கீழே விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது.